# பிரிவும் உறவும்

PIRIVUM URAVUM

தமிழில்:
திக்குவல்லை கமால்



சிட்னி மாகஸ் டயஸ்

WISDOM FOR A BETTER WORLD
THOTHANNA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவும் உறவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய மொழிபெயர்ப்பு நூல்கள்

**சிறுவர் இலக்கியம்:**

1. வெற்றிக் குருவி
2. ரோஜா இளவரசி
3. இனிய பிறந்தநாள்
4. எழுத்தும் நானும் நண்பர்கள்
5. பூ வண்ணத்துப் பூச்சி
6. அம்மா வரும்வரை
7. மயில் அரசன்
8. முன்மாதிரி

**இளைஞர் நாவல்:**

1. ஆப்த நண்பர்கள்
2. முல்லைத்தீவு தாத்தா
3. சின்னவனும் நண்பர்களும்
4. ராஜ யானை வனம்

**சிறுகதை:**

1. ஊரடங்குச் சட்டம்
2. தொடரும் உறவுகள்

**மரபுக் கதை:**

1. நல்வாழ்வுக்கான அறிவு
2. புதுவாழ்வுக்கான அறிவு
3. சகவாழ்வுக்கான அறிவு
4. நல்லாட்சிக்கான அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவும் உறவும்

சிங்களத்தில்:

**சிட்னி மாகஸ் டயஸ்**

தமிழில்:

**திக்குவல்லை கமால்**


வெளியீடு

**THOTHANNA PUBLISHING HOUSE**

Uswewa Road, Anamaduwa, Sri Lanka.

Telephone: 032-2263446 E-mail: thothanna@yahoo.com

Web: thothannabooks.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவும் உறவும்
(சிறுவர் நாடகம்)
© சிட்னி மாகஸ் டயஸ்
**முதற் பதிப்பு**: 2015
ISBN: 978-955-

**தமிழாக்கம்**:
திக்குவல்லை கமால்

**கணனிப் பதிவு:**
எஸ்.எஸ்.குமாரி

**வெளியீடு:**
தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ்
உஸ்வெவ வீதி, ஆனமடுவ.

**அச்சகம்:**
ஜயன் பிரின்ட் கிர:.பிக்ஸ்
52-A/1, கலஹிடியாவ,
கணேமுல்லை.

**Pirivum Uravum**
**(Children Drama)**
© Sidney Marcus Dias
First Print : 2015

**Translated by:**
Dickwella Kamal

**Typesetting by:**
S.S.Kumari

**Published by:**
Thothanna Publishing House
Uswewa Road, Anamaduwa,
Sri Lanka.
032-2263446
thothanna@yahoo.com

**Printed by:**
Jayan Print Graphics
51-A/1, Galahitiyawa, Ganemulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறவுகோல்

சிட்னி மாகஸ் டயஸ் தமிழ் பேசும் சிறார்களால் நன்கு அறியப்பட்டவர்.

அவரது எழுத்துக்கள் பெரும்பாலும் சிறுவர் சார்ந்ததாகவே இருந்து வருகிறது. ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவம் சிறுவர் மனோபாவங்களை நன்கு அறிந்து கொள்ளக் கைகொடுத்துள்ளது எனலாம்.

தமிழ் மொழிபெயர்ப்புக்குள்ளான அவரது ஆக்கங்களில் நாடக நூலொன்று மொழிபெயர்க்கப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

மாணவர்கள் பாடசாலைகளில் மேடையேற்ற இப்பிரதியை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மொழிபெயர்ப்புக்கு அனுமதி தந்த நூலாசிரியருக்கும், வெளியிடும் தோதென்ன நிறுவனத்தினருக்கும் எனது நன்றி.

இலக்கிய தாகமே இமய தாகம்

திக்குவல்லை கமால்
2015.01.08

**dickwellekamal @ gmail.com**
**0716386955, 0382292118**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதாபாத்திரங்கள்

1. சிரிமல் - சிங்கள இனச் சிறுவன்
2. ரமேஷ் - தமிழ் இனச் சிறுவன்
3. மிருகக் காட்சிசாலை உரிமையாளர்
4. வேலை ஒப்பந்தக்காரன்
5. வேலையாள்
6. வண்டிக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவும் உறவும்

## *காட்சி 1*

சிரிமல்லும் ரமேஷும் பன்னிரண்டு வயது தாண்டிக் கொண்டிருக்கும் சிறுவர்கள். இருவருமே ஏழைகள். அதனால் ஒரே வீட்டில் வேலைக்காரர்களாக இருந்தனர். அங்கே பல்வேறு துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தனர். அதனால் இருவரும் அங்கிருந்து பாய்ந்தோடத் தீர்மானித்தனர். (இருவரும் கள்ளமாகப் பாய்ந்தோடும் காட்சியுடனேயே நாடகம் ஆரம்பமாகிறது)

**சிறிமல்:** (குழப்பத்தோடு அங்குமிங்கும் நடந்தபடி மேடையின் நடுப்பகுதிக்கு வரல்)

ஆ... நீங்களெல்லாம் என்னைக் கண்டீர்கள் அல்லவா? ஐயோ கும்பிடுறன்... என்னைப் பற்றி யாரிடமும் சொல்லாதீங்க. பல வருஷங்களாக நாங்க பெரியதொரு வலையில சிக்கியிருந்தோம். இன்னக்கி அதிலிருந்து தப்பிட்டோம். நாங்க யாரென்னு நீங்க கேட்கலாம். என்னோட இன்னொருத்தர் இருந்தான். அவனத்தான் நான் தேடுறன் (மீண்டும் மேடையில் அங்குமிங்கும் பார்த்துவிட்டு முன்னே வரல்) அவனுடைய பெயர் ரமேஷ். என்ர பெயர் சிரிமல். நாங்க இரண்டு பேரும் பெரியதொரு பங்களாவில் வேலைக்காரர்களாக இருந்தோம். என்ன செய்வது? சின்ன வயஸிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னை அங்கு கொண்டு வந்துவிட்டாங்க. அதே காலத்தில்தான் ரமேஷும் வந்தான். படிப்பிக்கிறதா பொய் சொல்லி எங்கட அம்மாவ ஏமாற்றி கூட்டிக் கொண்டு வந்து, உயிர் போகுமட்டும் வேல வாங்கினாங்க. சுருக்கமாகச் சொன்னா நாங்க ரெண்டுபேரும் அடிமை போல வேல செய்தோம். எங்கள வெளியே போக விடவேயில்ல. ஒவ்வொரு நாளும் பாதி வயிற்றுக்குத்தான் சோறு போட்டாங்க. நானும் ரமேஷும் இவ்வளவு காலமாக பொறுத்துக் கொண்டிருந்தோம். முடியாத கட்டத்தில் ஓடிப்போக முடிவெடுத்தோம். நாங்க போய்வரும் இடங்கள நீங்க யாருக்கும் சொல்லமாட்டீங்கதானே? அவங்க ரொம்பக் கெட்ட முதலாளிமார்.

**ரமேஷ்:** சிரி... மா... ல் (ரமேஷின் குரல் கேட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறிமல்:** ரமே... ஷ்... நான் இங்கே. வா இப்பக்கம். சரி சரி இதோ எனது நண்பன். இவன்தான் ரமேஷ் (ரமேஷ் களைப்போடு மேடைக்கு வரல்)

**ரமேஷ்:** சிறிமல் நீ எங்கே போனாய்? நான் உன்னத் தவறவிட்டிட்டன். நான் உன்னத் தேடாத இடமில்லை. அதந்தப் பேய்களிடம் திரும்பவும் சிக்கிவிட்டாயோவென்று நினைத்தன்.

**சிறிமல்:** நானும் அப்படித்தான் இவ்வளவு நேரமாக பயந்து கொண்டிருந்தன். பங்களா தடோரியா குரைத்த குரவைக்கு நான் எந்தப் பக்கம் ஓடினே என்று எனக்கே தெரியல்ல. உனக்கும் நல்ல களைப்பு போலிருக்கு. எனக்கும் கடுமையான களைப்பு. நாங்க இப்படி கொஞ்சம் இருப்பம். இங்க உள்ள யாரும் எங்கள சந்தேகித்து தகவல் கொடுக்கப் போறதில்ல.

**ரமேஷ்:** அது நல்லது. என்னாலென்றால் நடக்கக்கூட முடியாது. (கல் ஒன்றின்மீது அமர்கிறார்கள்) இப்போது நாங்க என்ன செய்றது? எனக்கென்றால் போவதற்கு எந்த இடம் கிடையாது. உறவு சொல்ல யாருமே இல்லை. அதனால் தான் பங்களாவில் வேலைக்குச் சேர்ந்தன்.

**சிறிமல்:** நானும் அதே நிலையிலதான் இருக்கிறன். சரி நாங்க ஏதாவதொரு தொழில் செய்வோம். அல்லது சின்ன பிஸ்னஸ் ஒன்று ஆரம்பிப்போம்

**ரமேஷ்:** பிஸ்னஸ் பண்ண பணம் வேணுமே?

**சிறிமல்:** அதுவும் உண்மைதான்.

**ரமேஷ்:** ஒருநாளைக்கு எங்காவது கூலி வேலை செய்வோம். பிறகு அந்தப் பணத்தால் பிஸ்னஸ் தொடங்குவோம்.

**சிறிமல்:** அப்படியென்றால் நாங்க இருவரும் இன்றே போய் கூலிவேலை தேடுவோம். (ரமேஷ் சோர்ந்து போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்திலிருப்பதைக் கண்ணுற்று) ஏன் ரமேஷ் சோர்ந்து போய்...

**ரமேஷ்:** எனக்கு மயக்கம் போலிருக்கு. நான் நேற்று இரவு எதுவுமே சாப்பிடல்ல. காலயிலயும் சாப்பிடல்ல. எனக்கு கடுமையா பசிக்குது. எல்லாவற்றுக்குமுன் ஏதாவது சாப்பிடணும்.

**சிறிமல்:** அவங்க எங்கள கசக்கிப் பிழிந்து வேல வாங்கினாங்களே தவிர, ஒழுங்காக சாப்பிடக் கூட எதுவும் தரல்ல. நேற்று இரவு எனக்குத்தந்த உணவு நாறிப் போயிருந்தது. நான் அத நாய்க்குக் போட்டிட்டன். இனி என்ன செய்றது? பங்களாவுக்குள்ளிருந்து பொறுக்கி இருபத்தைந்து ஐம்பது சதங்களாக சேர்த்து வைத்திருக்கிறன்... ம்... பாண் ஒரு றாத்தல் வாங்கக் கூடப் போதாது போல...

**ரமேஷ்:** என்னிடமும் கொஞ்சம் இருக்கு. அதயும் சேர்த்து பாண் ஒரு றாத்தலாவது.... (சில்லறைகளை ஒன்றாகச் சேர்க்கின்றனர்.)

**சிறிமல்:** இருபத்தைந்து, ஐம்பது, எழுபத்தைந்து, ஐம்பது, ஒன்னிருவத்தைந்து, ஒரு ரூபா, இரண்டிருபத்தைந்து, ம்.. ஐம்பது சதம் நான்கு, சரி சரி... (எடுத்தல்) இங்க அறுபது ரூபா இருக்கு. பாண் ஒரு றாத்தல் வேண்டிச் சாப்பிடுவம். நீ கஷ்டப்பட வேண்டாம். இப்படியே இரு. பக்கத்தில கடைகள் இருக்கும். நான் பாண் கொண்டு வாரன். இரண்டு பேரும் போறது கூடாது, நான் சட்டென்று போய் வாரன். (சிரிமல் வெளிக்கிடல். ரமேஷ் மீண்டும் முன்னே வரல்)

**ரமேஷ்:** அம்மா... சிரிமல் வரும் வரையிலாவது பசி பொறுக்க முடியல்ல... ம்.. இந்த விதத்திலாவது இருந்த இடத்தால் வெளியேறக் கிடைத்தது பெரிய விஷயம். யாருக்குமே தெரியாமல் பெரும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் எங்களைப் போல் இன்னும் எத்தனை சிறுவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்களோ... ம்... என்னுடைய பெயர் ரமேஷ். என்னுடைய அம்மாவும் அப்பாவும் குண்டுவெடிப்பில் சிக்கி இறந்து போயிட்டாங்க. யாருமற்ற அனாதையாகக் கிடந்தபோது, யாராவதொரு தரகர் என்னை பங்களாவுக்கு விற்று பணம் எடுத்திருக்கக்கூடும். அன்று முதல் இதுவரையில ரொம்ப கவலைக்கிடமான வாழ்க்கைதான் வாழ்ந்தன். நான் தனியே இருந்திருந்தால் இன்னும் எவ்வளவோ தொல்லைகளுக்கு உள்ளாகியிருப்பேன். இருவரும் இருந்ததால் நல்லமுறையில் திட்டமிட்டே பங்களாவிலிருந்து வெளியேறினோம். இதற்குமேல ஒரு நிமிடம்கூட பசி பொறுக்க முடியாது. சிரிமல் எங்க போனானோ தெரியல்ல. இப்படிப் பசித்திருந்தால் நான் செத்துப் போய்விடுவேன். என்னவென்று பாதைப் பக்கமாகப் போய்ப் பாப்பம். (மேடையின் பிற்பகுதியால் வெளியேறல்)

**சிரிமல்:** (மேடையின் இடதுபக்க பின்பகுதியால் சிரிமல் உள்ளே வரல்)

ரொம்ப சிரமப்பட்டு அரை றாத்தல் பாண் வாங்கினன். கடைசியில இருந்ததே ஒரேயொரு அரை றாத்தல் பாண்துண்டுதான். பாண் எடுத்து எஞ்சிய சில்லறைக்கு கருப்பட்டித் துண்டு இரண்டு எடுத்தேன். ஆனால் முதலாளியென்றால் என்னைச் சந்தேகப் பார்வைதான் பார்த்தார். எங்கிருந்து வந்தநீ என்றும் கேட்டார். நான் நல்லதொரு பொய் சொல்லி தப்பிட்டன். இனியென்றால் எனக்கும் பொறுக்கவே முடியாத பசி. பாணின் வாசம் வரும்போது தாங்க முடியல்ல. இருந்தாலும் ரமேஷ் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். பாவம் அவனுக்கும் நல்லபசி. நான் இதனால் சின்னத்துண்டொன்று தின்றால் ரமேஷ் என்ன நினைப்பானோ தெரியாது. பரவாயில்லை. பசிக்குத்தானே... (சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டொன்றை சாப்பிட முனைதல்) ஒரு வகையில் பார்த்தால் நான் செய்வது மிக மோசமான செயல். இரண்டு பேருடைய பணத்தையும் சேர்த்துப் பாண் வாங்கிவிட்டு நான் இப்படிச் செய்வது நல்லதாக இல்லயே. இருந்தாலும் நான் இப்பொழுது சாப்பிட்டுவிட்டேன். இனி ரமேஷ் ஏதாவது கேட்டால் என்ன பதில் சொல்வது? சரி பரவாயில்லை. நான் இப்படிச் சொல்வேன். 'அரை றாத்தல் பாண் வாங்கியதில் எனது பணமே அதிகம். பாண் சாப்பிடுவோமென்று ஆலோசனை சொன்னதும் நான்தான். அடுத்தது பாண் வாங்க இவ்வளவு தூரம் நடந்ததும் நான்தான். அதனால் நான் ஒரு துண்டு அதிகம் சாப்பிட்டது ஒன்றும் பிரச்சினையல்ல.' ரமேஷ் எதற்காக கோபிக்கணும்? (சிரிமலுக்கு நன்கு தெரியும் படியாக பாண் துண்டொன்றை சாப்பிடல். அப்போது ரமேஷ் வருவதைக் காணல். சிரிமல் பாண் துண்டை விழுங்கச் சிரமப்படல்.)

**ரமேஷ்:** சிரிமல் நீ வரும்வரை பார்த்துப் பார்த்து முடியாத கட்டத்தில் பாதைக்கிறங்கினன். உனக்கு ஏதாவது பிரச்சினையோவென்று நினைத்தன். கடையொன்று இருந்ததா? (சிரிமல் பாண்துண்டை விழுங்க முடியாது சங்கடப்படல்) ஆ நீ பாண் வாங்கி தனியே சாப்பிடுகிறாய் என்ன? இப்படியொரு இழிவான வேலை செய்வாயென்று நான் நினைக்கவேயில்ல. எங்கள் இருவருக்கும் உள்ளது ஒரேவிதமான பசிதான். அப்படியிருக்கும் போது நீ தனியே சாப்பிடுவது சரியா?

**சிரிமல்:** (பாண் துண்டை இரண்டாகப் பிய்த்துக் கொடுத்தல்) பிடி உனது பங்கு. பசி பொறுக்க முடியாததால் ஒரு துண்டு தின்றது உண்மதான்.

**ரமேஷ்:** வேணாம் சிரிமல். நீ செய்தது அநீதியான வேலைதானே. அடுத்தவனின் பசியை விளங்கிக் கொள்ளாத நண்பர்களோடு நான் பழக விரும்பல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண் அரை றாத்தலையும் நீயே சாப்பிடு. நான் போய்விடுறன். (போதல்)

**சிறிமல்:** ரமேஷ் அப்படி நில்.

**ரமேஷ்:** என்னால் முடியாது

**சிறிமல்:** ஐயோ ரமேஷ் கோபித்துவிட்டானே.... ரமேஷ் .. ரமேஷ்.... (ரமேஷ் சென்ற பக்கமாக சத்தமிட்டப்படி செல்லல். மீண்டும் தனியே மேடைக்கு வரல். பாண் துண்டைக் கையிலெடுத்துப் பார்த்தல். அதை நிலத்திலடித்தல்) அநியாயம். அர்த்தம் இல்லாத சண்டையொன்றை இழுத்துக்கொண்டோம். எவ்வளவோ துன்பப்பட்டபின் பங்களாவிலிருந்து வெளியேறியும் பகிர்ந்து கொண்டு சாப்பிட முடியவில்லை. கடைசியாக அவன் கோபித்துக் கொண்டு போய்விட்டான். நட்பைவிட பாண்துண்டொன்று எப்படி பெரிதாகிவிடமுடியும்! நானும் இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்கலாம். ஐயோ எங்கள் இருவரதும் எதிர்பார்ப்பு? எல்லாமே இல்லாமல்போய்விட்டது. இனி ரமேஷைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாது. என்னதான் செய்வது? சரி நான் போகிறன் தொழிலொன்று தேடணும். (இசை)

## *காட்சி- 2*

(இடப் பக்கத்தால் முதலாளி ஒருவர் வரல். பார்த்த பார்வைக்கு கொந்தராத்துக்காரராய் தெரிந்தார். அவர் மேடையின் நடுப்பகுதிக்கு வரல்)

**முதலாளி:** இங்க பாருங் பாஸ் அண்ணே! இந்த கொங்கிரீட்டுக்கு அரசாங்கம் சொல்றபடி மிக்ஷர் போட வேண்டியதில்ல. கொஞ்சம் குறைத்துப் போடுங்க. இந்தப் பள்ளிக்கூடக் கட்டிடத்த கட்டிக் கொடுத்த பிறகு நாங்க படிக்கவா வரபோறம். உடைந்து விழுந்தாலும் எங்க தலையில விழப்போறதில்லயே. நான் சொன்னது விளங்குதா? ம்.. அங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்றடியில் யாரு.... என்ன அப்படி? சந்திக்க வந்தால் உள்ள வாங்க.... தேவய சொல்லுங்க.

**சிறிமல்:** (பயத்தோடு முதலாளியை நெருங்கி) முதலாளி நான் வேலையொன்று தேடிவந்தன்.

**முதலாளி:** வேலை... அப்படியென்றால் ஜொப் ஒனறு ..ம். வேலை செய்யவா இல்ல சம்பளம் வாங்கவா? (சிரிமல் மௌனமாக நின்றான்) பேச்சு வராதோ. வேலை செய்ய விருப்பமான ஒருவனாக தெரியவில்லயே. பத்துப் பேரை வேலைக்கெடுப்பதை விட ஒரு மெஷின் வாங்கிப் போடுவது லாபம். எங்கட நாட்டில





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்து சம்பாதிக்கக் கூடியவங்க ஒருவரும் கிடையாது. சுவீப் சுரண்டவும் சும்மா இருந்து பணம் பண்ணவும்தான் எல்லாரும் விரும்புறாங்க.

**சிறிமல்:** ஐயா முதலாளி நீங்க சொல்ற எந்த வேலயும் நான் செய்வன்.

**முதலாளி:** உன்ற சோர்ந்துபோன முகத்தப் பார்த்தா உன்னிடம் வேலை வாங்க மனம் வரல்ல. மற்றது நீ இன்னும் சின்னப் பையனல்லவா? இப்படி பால்குடிக்கிறவங்களிட்ட வேல வாங்கிட்டு சிறைக்குப் போக முடியாது. இப்போ சட்டதிட்டங்களும் ரொம்பக் கடுமை. பிறகு பாப்பம் இப்போ முடியாது. (திரும்பி) ஆ... ஆ... அந்த சுவருக்கு இப்படியா பிடிக்கிறது? வளையாக கட்டியா கூரை எழுப்ப தயாராகிறீங்க? எடுங்க.

(இன்னொருவருக்கு) என்னடா கழுதை... அந்த மண் குவியல அந்த இடத்திலயா கொட்டச் சொன்னது? எடும் எடும் அதை அந்தப் பக்கம். ஐயோ பாஸ் அண்ணே பெரிய ஐயா வாறார் அவர்போகுமட்டும் மிக்ஷர புத்தகப்படி செய்ங்க. (அதிகாரியை வரவேற்றல்) வாங்க ஐயா வாங்க. (வரவேற்குமாப் போல மேடையிலிருந்து வெளியேறல்)

**சிறிமல்:** (அப்பாவியாக மேடை முன்பக்கம் வரல்) வேலயொன்று தேடி எத்தின இடத்திற்கு ஏறி இறங்கிட்டன். என்னவாவது சொல்லி எல்லோருமே விரட்டி விடுறாங்க. உண்ணாமல் குடிக்காமல் பலவருடங்களாக அடிமை வேலை செய்த என்னைப் பார்த்தால், வேலை செய்ய முடியாத சோர்ந்து போனவனாகத் தெரியிது போலும். முதலாளிமாருக்கு அடிபணிந்து வேலை செய்ததால் என்னிடம் ஒருவித பயந்த சுபாவம் காணப்படுகிறதோ தெரியவில்லை. (மலைக்கு அப்பால் சத்தமிட்டபடி செல்லும் வியாபாரி ஒருவனின் குரல் பாடலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறது) அந்த கடலை வண்டிக்காரனோடு கதைத்துப் பார்க்க வேண்டும்.

**வண்டிக்காரன்:** (பாடியபடி மேடைக்கு வரல்)

*வாருங்கள் வாருங்கள் சின்னஞ் சிறார்களே*
*நிலக் கடைலை தேன்கடலை*
*உனது வயிறு நிறைந்திடும்*
*எனது உயிரும் நிலைத்திடும்*
*வாருங்கள் வாங்குங்கள் சின்னஞ்சிறார்களே*
*தேனில் தோய்ந்த சுவைநிலக்கடலை*
*சின்ன நாவில் ருசிக்கக் கொணர்ந்தேன்*
*துண்டாய் வெட்டி அழகாய்ச் சுற்றி*
*சில்லறை விலைக்கு தரக் கொணர்ந்துள்ளேன்*
*அன்பான மழலைகளைக் காப்பதற்காய்*
*உழைப்பவன்.*
*துன்ப மது அரக்கனுக்கு ஒருசதமும் கொடாதவன்.*
*தன்கையால் முன்னேற முயல்கின்ற சிறியவன்*
*சின்ன உங்கள் ஒத்துழைப்பால் வாழ்ந்துவருபவன்.*

(பாட்டின் இறுதியில் சிரிமல்லைக் கண்டு நிறுத்தல்)

என்னடா இது ஆயிரத்துக்கு வாங்கி நூறுக்கு விற்றது போல் முகம் தொங்குது

**சிரிமல்:** அண்ணா நான் ஒரு வேலை தேடிக் கெண்டு அலையிறன்.

**வண்டிக்காரன்:** வேலை.... வேலையென்ன? கொஞ்சக்காலம் நானும் தேடி களைத்துப் போனவன்தான். கால் தோல் தேயும் வரையில அலைந்திருக்கிறன். அதன் பிறகு எனது வேலைய நானே தேடிக் கொண்டன். இந்தக் காலம் இப்படித்தான். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயதொழில் என்று சொல்வாங்க. சுயதொழில் செய்ய முயற்சித்துப் பார் தம்பி.

**சிறிமல்:** அண்ணா உங்களால முடியாதா இதில் சின்னதொரு வேலை தர. நான் வேணுமென்றால் வண்டியை தள்ளுறன். அல்லது பாடிப்பாடி முன்னால போறன்.

**வண்டிக்காரன்:** முடியாது என்னால் முடியாது தம்பி. நான் இன்னுமே தொடங்கின இடத்திலதான் இருக்கிறன். வேலைக்காரர் எடுத்து நான் சோர்ந்து போனால் இந்தப் பிஸ்னஸை என்னால் நடத்திக் கொள்ள முடியாமல் போகும். இன்னுமே நான் துன்பப்படுறன். பல வருஷங்களுக்கு இப்படி நான் கஷ்டப்பட்டு உழைக்க திட்டமிட்டிருக்கிறன். இப்படி ஓடியோடி உழைத்து கொஞ்சம் சேகரித்து, கைகால் சோர்வடையும் போது சின்ன வாகனமொன்று வாங்குவன். அப்போது எனக்கொரு டிரைவர் தேவை. அதுவரையில் தம்பிக்கு காத்திருக்க முடியாதுதானே? எனக்கு செய்ய ஒன்றுமில்ல. நீங்க பின்வாங்க வேண்டியதில்ல. மனத தைரியப்படுத்திக் கொண்டு இன்னும் முயற்சி பண்ணுங்க. சரி நான் போறன். (பாடியபடி புறப்படல்- சிறிமல் அப்பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்).

**சிறிமல்:** அந்த மனிதன் வேலை தராவிட்டாலும் மனதுக்கு நல்ல தைரியத்த தந்தார். நானும் அதுபோல நல்ல இலக்கோடு வாழ்க்கைக்கு முகம்கொடுக்கப் பழகணும். எந்த சந்தர்ப்பத்திலும் அதைரியப்படக் கூடாது. (வெளியேறல். இருள்)

### *காட்சி - 3*

(மிருகக் காட்சி சாலை என்ற பெயர்ப்பலகை தொங்கியது. அதன் உரிமையாளர் கதிரையொன்றில் அமர்ந்திருந்தார். சிறிமல் உள்ளே புகுந்தான்)

**சிறிமல்:** ஸேர்! (அமைதி) ஸேர்! ஸேர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்:** என்ன தம்பி என்ன விஷயம்?

**சிரிமல்:** ஸேர் என்னயும் மிருகக் காட்சிசாலையில சேர்த்துக் கொள்ள முடியாதா?

**உரிமையாளர்:** மிருகக் காட்சி சாலைக்கா (வாய்விட்டுச் சிரித்தல்) என்னடா இது? மிருகக் காட்சிசாலைக்கு மிருகங்களை அல்லவா எடுக்கிறது. உனக்கு இன்னுமே அது தெரியாதா? இதில மிருகங்கங்கள் மாத்திரம்தான் இருக்கும். மனிதர்கள கூடுகளுக்குள்ள வைத்து காட்டுகிற விஷயமா நான் இன்னும் யோசித்ததே கிடையாது. ஆனால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப்போக அப்படியும் செய்ய வேண்டி வரலாம். இப்பொழுது மனிதர்களும் மிருகங்களைப் போல ஒருவரையொருவர் கொல்றாங்க... சண்டை பிடிக்கிறாங்க... வெட்டிக் கொள்றாங்க... ம்.... மிருகங்கள் பரவாயில்லையென்றுதான் சொல்லணும். உண்மையாகவே இன்னும் கொஞ்சக் காலம் போகும் போது மனிதனைப் பிடித்துக் கூட்டிலடைத்து "மனிதன்" என்று போட் போடணும். சின்ன எழுத்தில். "மிருகங்களுக்கு மத்தியில் மிகவும் விஷமானது" என்னும் குறிப்பிடவேணும். ஆனால் அதற்கு நீ பொருத்தமானவனல்ல. உன்னிடம் இன்னும் மனிதத் தன்மையற்ற சுபாவம் தென்படவில்லயே.

**சிறிமல்:** ஸேர் மிருகங்களுக்கு சாப்பாடு கொடுக்க என்னால் முடியும். மிருகக்கூடுகளிலுள்ள கழிவுகளை அகற்ற, நல்ல முறையில் கழுவித் துப்பரவு செய்ய என்னால் முடியும். நான் பங்களாவில் இருக்கும்போதும் இதெல்லாம் செய்தன்.

**உரிமையாளர்:** அதற்கு நிறையப் பேர் இருக்கிறாங்க. ம்... அப்படி கொஞ்சம் இரு பார்ப்பம். ம்... உன்னால் நடிக்க முடியுமா?

**சிறிமல்:** நடிப்பது என்றால் எக்டிங் செய்றதா?

**உரிமையாளர்:** எக்ட் செய்றதுதான். இப்படித்தானா படிப்பிக்கிறாங்க? நீ போன பள்ளிக்கூடத்தில் இங்கிலிஷ் தானா படிப்பித்தாங்க?

**சிறிமல்:** நான் பள்ளிக்கூடத்துக்குப் போகல்ல ஸேர். நான் இருந்த பங்களா நோனாமார் துரைமாரெல்லாம் இங்கிலிஷ்லதான் கதைப்பாங்க. அவங்க வீட்டு மிருகங்களோடும் இங்கிலிஷ்தான் கதைப்பாங்க. அவற்றுக்கும் இங்கிலிஷ் நன்றாக விளங்கும்.

**உரிமையாளர்:** உன்னால சிங்கம் போல நடிக்க முடியுமா?

**சிறிமல்:** முடியும் ஸேர். நான் நின்ற பங்களாவிலுள்ள நாய்கள் சரியாக சிங்கம் போலத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்:** சரி நடித்துக் காட்டு பார்க்கலாம். பங்களா நாய் போலல்ல. அப்போது நாய்ச் சிங்கமாகிவிடும். எனக்கு வேண்டும் சிங்கம்.. ம்.. தொடங்கு.

(சிரிமல் சிங்கம் போல் நடித்தான். உரிமையாளர் பக்கமாகப் பாய்ந்தான். அவர் திடுகிட்டுப் பின்வாங்கினார்)

**சிரிமல்:** (நிறுத்தி) நல்லாயிருக்கா ஸேர்.

**உரிமையாளர்:** அற்புதம் பொருத்தமான ஆள். இப்பொழுது உனக்கொரு வேலை தரமுடியும். உன்னுடைய பதவி என்ன தெரியுமா? (சிரிமல் அமைதியாகக் கவனித்தான்) இந்த மிருகக் காட்சிசாலையின் சிங்கம்.

**சிரிமல்:** ஐயோ ஸேர் நான் எப்படி உண்மையான சிங்கமாக முடியும்?

**உரிமையாளர்:** உண்மையான சிங்கம் அல்லதான். உண்மையான சிங்கம் போல இருந்தால் தாராளமாகக் காணும். அதுசரி.. உண்மையான சிங்கமொன்றைக் கொண்டுவர எவ்வளவு செலவு தெரியுமா? அதெல்லாம் இப்பொழுது எனக்கு மிச்சம், சிங்கத்திற்குப் பதிலாக உன்னை எடுப்பதால்.

**சிரிமல்:** இருந்தாலும் ஸேர் நான் உண்மையான சிங்கம் அல்லவே.

**உரிமையாளர்:** இந்த சமுதாயத்தில் எப்படி உண்மையான விஷயங்கள் செய்வது? மிளகு விதைகளில் பப்பாசி விதைகளை கலக்கிறாங்க. மாங்காய், பப்பாசி, அப்பிள், முந்திரிகை, மீன் இப்படி எல்லாவற்றுக்குமே ஃபோமலின் அடிக்கிறாங்க. இப்படிப்பட்ட கேடுகெட்ட காலத்தில் சிங்கமொன்று பொய்ச் சிங்கமானால் என்ன? என்ன சொல்லு? இந்தத் தொழிலைச் செய்ய விருப்பமா?

**சிரிமல்:** நான் எப்படி தெரிந்து தெரிந்து பொய் செய்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எப்படி சிங்கக் கூட்டில் காலம் கடத்துவது?

**உரிமையாளர்:** இவ்வளவு யோசிக்க வேண்டுமா? சிங்கம் போல நடிக்க வேண்டியது பகலில் மாத்திரம்தான். இரவாகும் போது பின்பக்க அறையில் நிம்மதியா தூங்கலாம். கட்டில், பாய், தலையணை எல்லாம் தருகிறேன். ம் வா... வா உன்ன சிங்கம் போல் உடுப்பாட்டுகிறன். அப்படி கொஞ்சம் இரு. எங்கே அந்த சிங்க உடையை கொண்டு வாரன்.

**சிரிமல்:** இந்த முறையென்றால் பெரியதொரு வலையில் மாட்டிக் கொள்ளப் போறன். இது பங்களாவை விட மோசமானது போலிருக்கு. என்ன இருந்தாலும் அங்கே தோட்டத்தினுள்ளே நடமாடவாவது முடிந்தது. இங்கே கூட்டுக்குள்ளதான் இருக்கவேணும். பரவாயில்லை. வருவதற்கு முகம் கொடுப்போம்.

**உரிமையாளர்:** (வரல்) இதுதான் உடை... ம்.. உடுத்திக்கொள் பார்ப்பம் (உரிமையாளர் சிங்க ஆடையை அணிவித்தல்) ஷா... அற்புதம்... சரி கொஞ்சம் சத்தம் காட்டி சிங்கம் போல் நடியும் பார்ப்போம் (சிரிமல் குறவையிட்டு உரிமையாளர் மீது பாய்தல்) ∴பயின் ∴பயின் பெண்டாஸ்டிக் ஷா அற்புதம் யாராலும் விளங்க முடியாது. நீயொரு மனிதச் சிறுவனென்று. சரி கூட்டுக்குப் போவம் (இருவரும் புறப்படல். மிருகக் காட்சிசாலையில் மிருகங்களைப் பார்க்கும் மேடைக்கு வரல்)

## *காட்சி- 4*

**சேவகன்:** சீச்சீ எனக்கென்றால் இங்க வேலை செய்வது வேணாமல் போயிற்று. ஒவ்வொரு மிருகமா குறைந்து கொண்டு போகுது. பெரியவருக்கு அதைப் பற்றி எந்தக் கவலையுமில்லை. அவருக்கு மாலையில காசுப்பெட்டி நிறைந்திருந்தால் போதும். இங்க பா.... பெரியதொரு மிருகக்காட்சிசாலையாம். சிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லை. கழுதை இல்லை. கீரிப்பிள்ளை கூட இல்லை. ஆனால் பெரிய மிருகக்காட்சிசாலையாம். தூரம் கிராமங்களிலிருந்து பஸ், லொறிகளில் எல்லாம் பிள்ளைகள் வாராங்கள். வந்து பார்க்க மிருகங்கள் இல்லை. அவங்க எங்களுக்குத்தான் ஏசுறாங்க.. (உரிமையாளர் வேலைக்காரனை அழைத்துச் சத்தமிடல். இரண்டாம் குறவைக்கு வேலைக்காரன் குழப்பமடைதல். அவனது பெயர் கொன்ஸால்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவகன்:** ஸேர் நான் இங்க இருக்கேன். சீக்கிரம் வந்திடுறன்.

**உரிமையாளர்:** (கொன்ஸால் வலப்பக்கத்தால் வெளியேறும் போது உரிமையாளர் கோபத்தோடு இடப்பக்கத்தால் வரல்) அப்படி நில். நான் அங்கு வாரன். உனக்கு சந்தோஷமான செய்தியொன்று சொல்ல வேண்டியிருக்கு. அதனால்தான் உன்னத் தேடிக்கொண்டு வந்தன்.

**சேவகன்:** ஐயோ என்ன ஸேர். சரிதானே விஷயம் சரிதானே... அந்த விஷயம்

**உரிமையாளர்:** எந்த விடயம்?

**சேவகன்:** மறந்திட்டீங்களா ஸேர்.. நன்றாக மனதுக்கெடுத்து வேலை செய்தால் எனக்கு ஒரு மணப்பெண் தேடித் தருவதாக் சொன்னீங்களே.. அதுதானே சந்தோஷமான செய்தி?

**உரிமையாளர்:** ஆ ஆ.. குழப்படி செய்யாமலிரு.. அதற்கு இன்னும் காலமிருக்கே.

**சேவகன்:** ஆ(சோர்ந்து போனவனாக ஏற்றுக்கொள்ளல்).

**உரிமையாளர்:** எங்கட ஸுவுக்கு புதிசா சிங்கமொன்று கொண்டு வந்திருக்கேன். நேற்று இரவு பிளேனிலதான் வந்தது. இப்போதான் கூட்டில் விட்டிருக்கு.

**சேவகன்:** ஷா... ஷா மிருகக் காட்சிசாலைக்கு வார சனங்களெல்லாம் திட்டிக் கொண்டுதான் போறாங்க. சிங்கம் இல்லாத ஸுவா என்று கேட்டாங்க. ஸேர் நான் டுக்கென்று போய்ப் பார்த்திட்டு டக்கென்று ஓடி வாரன்.

**உரிமையாளர்:** ஆ.. ஆ.. டக்கென்று போய் டுக்கென்னு வா. உனக்கு ஒரு விஷயம் சொல்லணும் (வேலைக்காரன் போன பின்பு சொந்தக்காரன் சத்தமிட்டுச் சிரித்தல்) சிங்கமென்று கழுதைய காட்டினாலும் நம்புறவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவகன்:** ....ஸேர் நான் போய் எட்டிப் பார்த்தன். அது வைத்து சத்தத்துக்கு மேலேபோய் கீழே விழுந்திட்டன். அதுக்கு என்னை அறிமுகமில்லைதானே. இனி பார்வையாளர்கள் வரவரக்கூடும். பிள்ளை பார்த்தா ஆசையும், பயமும் இரண்டும் ஏற்படும்.

**உரிமையாளர்:** அதில்ல கொன்ஸால்

**சேவகன்:** ஸேர் அப்படியென்றால்?

**உரிமையாளர்:** சிங்கம் இல்லாததால் கடந்த காலத்தில் சனம் ரொம்பக் குறைந்து போச்சி. இந்தப் புதிய சிங்கத்தைப் பற்றி இந்த நாட்டுக்கு நீ நல்லதொரு விளம்பரம் செய்யவேணும். இல்லா விட்டால் யாருக்கும் தெரியாதே. இந்தச் சிங்கத்தை இலங்கைக்கு கொண்டு வர எனக்கு லட்சக்கணக்கில் போய்விட்டது. இதற்கு நாளாந்தம 200 கிலோ இறைச்சி கொடுக்கணும். ஈரல் 60கிலோ கொடுக்கணும். இதற்கெல்லாம் எவ்வளவு செலவு..?

**சேவகன்:** நான் நல்லதொரு விளம்பரம் செய்றன். இன்றைக்கே ஆரம்பிக்கணும்.

**உரிமையாளர்:** சரிசரி... இந்த மிருகக் காட்சி சாலைக்கு ஆபிரிக்க கொங்கொ வனாந்தரத்திலிருந்து கேசரி வர்க்க சிங்கமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள இலட்சக்கணக்கான சிறுவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் பின்னர் கவலைப்பட வேண்டி நேரிடும். இப்படி உன்ற கையாலயும் போட்டுச் சொல்லு.

**சேவகன்:** சரி சரி ஸேர் இன்றல்ல நான் இப்போதே ஆரம்பிக்கணும் (சேவகனின் பாடல்)

*சிங்கம் மயிரடர்ந்த சிங்கம்*

*கம்பீரமாய் எழுந்து*

*கர்ச்சித்தால் கேட்பதற்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலம் கடத்தாது வந்து செல்லுங்கள்*

*அருமை புதுமையான*
*விலங்குக் காட்சிச் சாலையின்*
*அழகு பாரக்க வாருங்கள்*

*இலங்கையில் இருந்ததல்ல*
*கொங்கோவால் கொண்டுவந்த*
*சிங்கம் மயிரடர்ந்த சிங்கம்.*

*சிறியவர்கள் பெரியவர்கள்*
*அனைவரதும் மனம் கவரும்*
*சிங்கம் மயிரடர்ந்த சிங்கம்.*

*வேண்டாமே தாமதம்.*
*வந்து பாருங்கள்*
*அருமையான விலங்குச்சாலை*
*புதுமை பாருங்கள்.*

## *காட்சி - 5*

(பாடல் முடியும் தருவாயில் சிங்கம் உறுமிக்கொண்டு மேடைக்கு வரல். நான்கு பக்கமும் பார்த்துவிட்டு... பக்கமாக உயர்ந்த இடமொன்றுக்கு ஏறல்)

**உரிமையாளர்:** எங்கே இவன்? இப்போது இருந்தவன் எங்கு போய் தொலைந்தானோ தெரியாது. சனங்கள் நிரம்பி சிங்கம் கடும் குரல் எழுப்புது. கொன்ஸால் இங்கே வா. கொஞ்சம் மறந்து போயிட்டன். ஆளுக்கொரு பொறுப்புக் கொடுத்தன். கடைசிநேரம் நானேதான் அறிவிப்பு செய்ய வேண்டி வந்திட்டுது.

"கவனியுங்கள் கவனியுங்கள்... மிருகக் காட்சிசாலைக்கு வந்துள்ள பார்வையாளர்களுக்கு இந்தவிசேட அறிவித்தல். அந்தக் கூட்டிலிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்க ராஜாவை இலங்கைக்குக் கொண்டு வந்து இரண்டே நாட்கள். இதற்கு மனிதர்கள் இன்னும் பழக்கமாகவில்லை. பகிடிகள், விளையாட்டுக்கள் எதுவும் செய்ய வேண்டாம். தொல்லை கொடுக்க வேண்டாம். சிறு கற்களினால் எறிய வேண்டாம். சிங்கம் குழப்பினால் அது கூட்டை உடைத்துக் கொள்ளக்கூடும். மதில்கள் மீது பிள்ளைகளை இருத்தல் வேண்டாம். தற்செயலாக மறுபக்கம் விழுந்தால் ஒருதுண்டுகூட எஞ்சாது."

(இதற்கிடையில் சிங்கம் கர்ச்சித்தது) அங்குமிங்கும் அலைந்தது. திடீரென்று பாய்ந்தது. சிங்கத்தின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தைக் கேட்டு வலது பக்கத்தால் புலியொன்றின் உறுமல் எழுந்தது. சற்று நேரத்தில் சிங்கமும் புலியும் இருபக்கமாக நின்று ஒன்றுக்கொன்று முறைத்துக் கொண்டன. சண்டை பிடிக்கத் தயாராகின. அதற்கிடையில் வேலைக்காரன் ஓடிவந்தான்.

**வேலைக்காரன்:** ஸேர் ஸேர் பெரும் குழப்படி

**உரிமையாளர்:** எங்கே நீ தொலைந்திருந்தாய்? என்ன இங்கே சுற்றி வளைத்து...

**வேலைக்காரன்:** ஸேர் நடந்த கதையைப் பிறகு சொல்றன். நாளை முதல் சிங்கம் பார்க்க பார்வையளார்கள் வரிசையாக வந்து கொண்டேயிருப்பாங்க. அதுக்கிடையில் இது இரண்டும் என்ன செய்து கொள்ளுமோவென்று பயமா இருக்கு.

**உரிமையாளர்:** பார்த்துப் பார்த்திராமல் ஏதாவது செய். இரண்டும் முட்டிக் கொள்ளப் போகும் சத்தத்திற்கு சனங்கள் பயந்து ஓடுறாங்க.

**வேலைக்காரன்:** ஸேர்.. என்னிடம் ஒரு மந்திரம் இருக்கு. அதச் சொன்னால் பிள்ளை போல ஒருபக்கமாகப் போய்த் தூங்கிவிடும். (நடுவே பாய்ந்து மந்திரம் சொன்னான். அவற்றின் சத்தமும் குறைந்தது. சேவகன் மேடையிலிருந்து விலகினான்.) அம்மா ஒருமாதிரி அடங்கிவிட்டன. மந்திரத்துக்கு இன்னும் குழம்பி வாயைப் பிடுங்கித் தின்னுமோவென்று பயந்தன்.

**உரிமையாளர்:** (மேடையில்) ம்... புதுப்பையன்... அற்புதமாக சிங்கம்போல் நடித்தான். அவன் உண்மையான சிங்கம்தான். சனத்திற்கு பயம். எனது வேலைக்காரனும் ஏமாந்துபோய்க் கிடக்கிறான். உண்மையான கதை எனக்கு மாத்திரம்தான் தெரியும். அவனுக்கு பொருந்திய கணக்கை விடக் கொஞ்சம் கூடக் கொடுக்கணும். சரி பையனப் போய்ப் பார்க்கணும் (வெளியேறல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *காட்சி - 6*

(மேடைக்கு வந்த சிரிமல் மிகவும் களைப்புற்றிருந்தான். முகமூடி கழன்று அவனது முகம் ஓரளவு தெரிந்தது. அவன் இரண்டாக மடிந்தபடி களைப்பாறினான்)

**சிங்க சிரிமல்:** ம்மா உயிர் போய்விட்டது. பயந்துதான் அப்படிச் சத்தமிட்டேன். சிங்கத்தைப் போல் நடிப்பது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் பிரச்சினையல்ல. ஒருவேளை புலி கூட்டை உடைத்துக் கொண்டு எனது கூட்டுக்குப் பாய்ந்திருந்தால்.. எனது துண்டுகூட எஞ்சாது. அது போடும் சத்தத்துக்கு எனது உடம்பு நடுங்கத் தொடங்கிவிட்டது. நான் திரும்பத் திரும்ப கர்ச்சித்தேன். சிலநேரம் நான் உண்மையான சிங்கமென நம்பியிருக்கும்.

**உரிமையாளர்:** (உள்ளே வரல்) ஹஹ்ஹா நீயென்றால் உண்மையான சிங்கம்தாண்டா. எனக்கே ஆச்சரியம். உனது குறவைக்கு சனங்களெல்லாம் ஏமாந்திட்டாங்க. நான் உனது மாதச் சம்பளத்தை இருபத்தைந்து ரூபாவால் கூட்டியிருக்கேன். மகிழ்ச்சிதானே.

**சிங்க சிறிமல்:** ஐயோ ஸேர் நான் உங்க காலப்பிடித்து கும்பிடுறன். எனக்கிந்த வேலை சரிவராது. ஏதாவது கூட்டித் துப்பரவாக்கும் வேல தாங்க ஸேர். முடியாதென்றால் என்னப் போகவிடுங்க.

**உரிமையாளர்:** ஹஹ்ஹா என்னடா வாலிபன் போல இருக்கிறாய். ம் ஒன்றும் குழம்ப வேண்டியதில்ல. எனது வேலைக்கு பொருத்தமான ஆள் கிடைத்திருக்கும்போது நான் எப்படியும் உன்ன விடப் போறதில்ல. அந்தச் சிங்கம்தான் நீ. அட பெடியா இங்க பார். அதிகச் செலவில்லாமல் ஏதாவது தேடிக்கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பு இது. உனக்கு இருபத்தைந்து ரூபாவல்ல முப்பது ரூபாவே கூட்டித்தாரன். இன்று முதல் நாள். புரியாணிதான் உனக்கு இரவுச் சாப்பாடு. ஆனால் இன்று மாத்திரம்தான்.

**சிறிமல்:** ஐயோ ஸேர் அடுத்த பக்கம் மனித மாமிசம் தின்னும் புலி இருக்கும் போது நான் எப்படி இந்த பக்கமா இருக்க முடியும்.

**உரிமையாளர்:** அது பற்றி ஒன்றும் நீ பயப்பட வேண்டியதில்ல. யானைக்கும் உடைக்க முடியாத கூடல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கன். நீ பொய்ச்சிங்கமென்றத எந்தச் சந்தர்ப்பத்திலும் யாருக்கும் தெரியப்படுத்திக் கொள்ளாதே. நான் போறன் (சற்று சென்று திரும்பிவரல்) உனக்கு ஒன்று சொல்ல மறந்திட்டன். எங்கட வேலைக்காரன் வந்து பெரிய பெரிய இறைச்சித் துண்டுகள் இரண்டொன்று கதவுக்கிடையால் போடுவான். நீ கொஞ்சம் செருமிவிட்டு, அவன் போன பின் அதையெடுத்து அடுத்த பக்கம் ஓநாய் கூட்டுக்குள் போட்டுவிடு. ஆனால் புலி இருக்கும் கூட்டுக்குள் மாத்திரம் வீசாதே. அது குழம்பிவிடும்.

**சிறிமல்:** (முன்பக்கமாக) ஐயோ ஒன்றும் புரியல. எனக்கு என்னதான் நடக்கப் போகிறதோ தெரியாது. கடவுளுக்குத்தான் தெரியும். என்ன இருந்தாலும் நான் பயப்படக்கூடாது. அம்மா அப்பா எவருமே இல்லாமல் அனாதையான எனக்கு உதவியது. இந்த மிருககாட்சிசாலை முதலாளி மாத்திரம்தான். அவரது வேண்டுகோளை உதாசீனம் செய்வது பண்பல்ல. (மீண்டும் முகமூடியை சரிசெய்து கொண்டு மேடைப்பக்கம் சத்தம்காட்டி வெளிச்செல்லல்)

## காட்சி - 7

*கெட்டிக்காரப் பெரியவர்*
*பைநிறைக்க வல்லவர்.*
*கிட்ட வரும் ஊழியரைக்*
*வதைத்து வேலை வாங்குவார்.*

*பணம் பண்ண வாலாட்டும்*
*பழக்கமுள்ள பெரியவர்*
*கொடுத்த வாக்கை மீறுவார்*
*மடக்கிப் பொய்யும் கூறுவார்.*

*விலங்குச் சாலைக் கூட்டினுள்*
*விலங்கு போல இருந்திடில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பலமடைவார் பெரியவர்*

*பெரிதும் நண்பராகுவார்.*

(பாடியபடி மிருகக்காட்சிசாலைக் பாடலாசிரியர் மேடைக்கு வரல்) பாடலின் இறுதியில் சிங்கத்தினதும் புலியினதும் குரல் ஒன்றாகக் கேட்டது. உரிமையாளர் கோபத்தோடு வேலைக்காரனைத் திட்டல்.

**உரிமையாளர்:** என்னடா இது. நீ இங்கே ஹாய்யாக இருக்கிறாய். அங்க பெரிய குழப்படி.

**வேலைக்காரன்:** என்ன ஸேர் என்ன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்:** அங்க சிங்கம், புலி, இரண்டுமே வெளியே பாய்ந்து.... நீ கூடெல்லாம் திறந்திட்டு ஏன் இங்க வந்தாய்?

**வேலைக்காரன்:** ஐயோ ஸேர் நானல்ல.

**உரிமையாளர்:** நீ இல்லயா? அப்போ நான் தானா? இரண்டும் சண்டைக்குத் தயாராகின்றன. சனமெல்லாம் அங்குமிங்குமாக ஓட்டம். போ போ..... சனங்களெல்லாம சிதறிப் போய்... ஓடு ஓடு..... பார்த்துக் கொண்டிருக்காமல்.

**வேலைக்காரன்:** ஐயோ ஸேர் எப்படி சிங்கத்தையும் புலியையும் கட்டுப்படுத்துவது?

**உரிமையாளர்:** ஏன் ஏன் உன்னிடம் அந்த மந்திரம் இருக்கே போய்ச் சொல்லு அவசரமாய்

**வேலைக்காரன்:** ஐயோ ஸேர் அது பொய் மந்திரம், குழம்பிய மிருகங்கள் அதற்குக் கட்டுப்படுவதில்லை. (வெளியேறல்)

**உரிமையாளர்:** சிங்கமும் புலியும் சண்டை பிடிப்பதற்குப் பரவாயில்லை. பொலிஸுக்குத் தெரிந்து இங்கே வந்திருந்தால் எனது கள்ள வேலைகள் எல்லாம் அம்பலமாகிவிடும். அப்புறம் நானும் மிருகம்போல் கூட்டுக்குள்தான் இருக்கவேண்டி நேரும். இங்கல்ல பொலிஸ் கூட்டில். (அழுதழுது வெளியே செல்லல்)

(சிங்கமும் புலியும் மேடையின் இரு பக்கங்களாலும் உள்ளே வரல். இரண்டும் கோபத்தோடும் பயத்தோடும் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளத் தயாராதல். இலக்குப் பார்த்து சிங்கம் புலியின் மீது பாய்ந்தது. அதற்கிடையில் புலியிடமிருந்து மனிதக்குரல் வெளிப்படுகிறது.) "ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்" என்று. கூடவே சிங்கத்தின் ஒரு பக்கமுகம் கழன்று சிரிமலின் முகம் வெளிப்பட்டது. புலி அதைக் கண்டு ஆச்சரியத்திற்குள்ளாகி சண்டையைக் கைவிட்டு, அரங்கின் முன்பகுதிக்கு வந்து மீண்டும் சிரிமல் பக்கமாகப் பார்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலி:** சிறிமல் நீ

**சிறிமல்:** ஆ.. புலி மனிதனைப் போல் பேசும் புலி. என்னால் நம்பவே முடியல்ல. (முன்னே வரல்)

**புலி:** ம் உன்னைப் போலவே என்னாலும் கதைக்க முடியும். (அவ்வாறு கூறியபடி தனது பொய் உடையை அகற்றல். நான் ரமேஷ்)

**சிறிமல்:** என்ன? எனக்கு வியப்பாக இருக்கு. நான் பொய்த் தோற்றத்திற்கல்லவா பயந்திருக்கேன்.

**ரமேஷ்:** நானும் உன்னைப் போலத்தான். (இருவரும் அணைத்துக் கொள்ளல்)

**சிறிமல்:** நான் இவ்வளவு நாளும் உனக்கு எவ்வளவு பயந்தோடியிருந்தன். உண்மையான புலி யென்றல்லவா நினைத்தன்.

**ரமேஷ்:** ஏன்.. உன்னை இந்தக் கூட்டுக்குள் கொண்டுவந்து போட்டதிலிருந்து நான் நூறு தடவை மேல் செத்துப் பிழைத்திருக்கிறன். இது இப்போதும் என்னுடலில் இரத்தம் ஒரு போத்தல் அளவு தீய்ந்து போயிருக்கும்.

**சிறிமல்:** இது ஒரு அற்புதமான சந்திப்பு

**ரமேஷ்:** உண்மையாகத்தான்

**சிறிமல்:** இவ்வளவு காலம் அருகருகே இருந்தும் ஒருவரையொருவர் இனம்காண முடியாமல் போய்விட்டதே. புலி உடையில் இருக்கும்போது....

**ரமேஷ்:** அதுதான் எங்கள் இருவராலும் பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாமல் பயத்தில் இருந்தோம். அதனால முதலில் இந்த மிருக உடைய கழற்றி எறிவோம்.

**சிறிமல்:** அது நல்ல யோசனை

(இருவரும் உடைகளைக் கழற்றித் தூர எறிகின்றனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறிமல்:** எனக்கு இப்பொழுது அற்புதமான சுகமும் சுதந்திரமும் கிட்டியது போலிருக்கு

**ரமேஷ்:** எங்களுடைய தவறால்தான் எங்களுக்கு இந்த உடைகளை அணிய வேண்டி நேர்ந்தது. சிரிமல் என்னோடு கோபமில்லையல்லவா?

**சிறிமல்:** நாங்கள் முதலில் அதையெல்லாம் மறந்திடுவோம். நாங்க இனி இந்த மிருகக்காட்சி சாலையில் இருக்க வேண்டியதில்லை. நாங்க இருவரும் போய் மீண்டும் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்போம்.

**உரிமையாளர்:**(கலைந்த உடைகளைச் சேர்த்தல்) ஐயோ பிள்ளைகளே நீங்கள் இருவரும் போகவேண்டாம். உங்களால்தான் கடந்த நாட்களில் நான் எனது உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருந்தன். இனி நான் வரும் சனங்களுக்கு எதைத்தான் காட்ட முடியும்? ஐயோ முன்பு போல் இந்த உடைகள அணிந்து கொண்டு அந்தக் கூடுகளுக்கு போங்க பிள்ளைகளே.

**சிறிமல்:** தாங்கள் எங்களுக்கு பொய் செய்தீர்கள். எங்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கே பொய் செய்தீர்கள். நாங்கள் இருவரும் பழைய நண்பர்கள். உங்களுடைய தொழிலைவிட எங்களுடைய நட்பு மேலானது. நாங்கள் போவோம் ரமேஷ்.

(இருவரும் வலப்பக்கத்தால் வெளியேறும்போது மறுபக்கத்தால் வேலைக்காரன், புலியின் உடையை எடுத்தபடி மேடைக்கு வரல்)

**உரிமையாளர்:** (அழுது விழல்) ஐயோ பார் கொன்ஸால் நான் உனக்கும் களவாகத்தான் அவர்கள் இருவரையும் வேஷமிட்டு வைத்திருந்தன். எல்லோரது வயிற்றுப் பிழைப்பையும் நினைத்துப் பார்க்கத்தானே வேணும். அவங்க போய்விட்டாங்க. இனி நீயும் நானும்தான் சிங்கம் புலியாக உடுத்தி நடிக்க வேண்டியிருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவகன்:** நல்லவேளை எனக்கு மணப்பெண் தேடித்தருவதாக வருடக்கணக்காக சொல்லிச் சொல்லித் தானே என்னிடம் வேலை வாங்கினீங்க. உயிர் போகாத குறை. இனி நானும் போய்விடுறன் (போதல்).

**உரிமையாளர்:** ஐயோ போகாதடா (அழுதபடி மேடையால் வெளியேறல்)

(சிரிமலும் ரமேஷும் பாடியபடி மேடைக்கு வரல். அவர்களது பாடலுடன் வேலைக்காரனும் இன்னும் பலரும் இணைந்து கொள்ளல்).

*வேஷம் போட்டு மிருகங்களாய்*
*வேறு படுவது எதற்காக?*
*நாங்கள் கோபமற்று வாழ்வோம் நண்பரே!*

*வேற்றுமையும் பிரிவினையும்*
*இருக்குமிடம் துன்பம்*
*நாங்கள் கோபமற்று வாழ்வோம் நண்பரே!*

*கானல் நீரில் மீன்பிடிக்கும்*
*மனிதர் சூழ உள்ளதால்*
*நாங்கள் கோபமற்று வாழ்வோம் நண்பரே.*

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PIRIVUM URAVUM

பிரிவும் உறவும்

தமிழில்:
திக்குவல்லை கமால்

***சிட்னி மாகஸ் டயஸ்***

இந்தப் படைப்பு சமூக ஒருமைப்பாட்டைச் சுற்றிச் சுழலும் ஒரு நாடகப் பிரதியாகும். சமூக ஒருங்கிணைப்பு நான்கு அடிப்படைகளைக் கொண்டது. உண்மையை வெளிப்படுத்தல், நியாயம் நிலைநாட்டப்படல், மன்னிப்பளித்தல், அன்புடைமை என்பனவே அவையாகும். சத்தியம் மறைக்கப்பட்டிக்கின்றமையால். அது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்நாடகத்தில் இரு நண்பர்களிடையேயான உண்மையான நட்பு குறுகிய வியாபாரி ஒருவனால் மறைக்கப்பட்டது மட்டுமன்றி அவர்களிடையே பகை மூட்டப்பட்டு இலாபம் சம்பாதிக்கப்பட்டது. பார்வையாளர்களும் அந்தச் சண்டையால் மயக்கமூட்டப்பட்டனர். இன்று எமது நாட்டில் இனப் பகைமை மூட்டப்பட்டு இடம் பெறுவதும் இதுதான். இருந்தும் இறுதியில் உண்மை வெளிப்பட்டு நியாயம் நிலைநாட்டப்படுகிறது. நண்பர்களிடையே அன்பு பெருக்கெடுத்தோடியது. மன்னிப்பளிப்பதன் மூலம் ஒருமைப்பாடு மேலோங்குகிறது. வியாபாரியும் பழிவாங்கலில் இறங்கவில்லை.

இந்நாடகம் இனப்பகைமையில் விழுந்து புரளும் இலங்கையைப் பற்றிச் சொல்வதுபோல் எனக்குப் படுகிறது. எமது பிள்ளைகளுக்கு ஆதர்ஷமான படைப்பாகும்.

தனது வாழ்வின் பெரும்பகுதியை இலங்கை தமிழ் - சிங்கள - முஸ்லிம் சிறார்கள் மத்தியில் நட்புறவை வளர்த்தெடுக்க பாடுபடும் கலை- இலக்கியவாதியான எனது நண்பர் சிட்னி மாகஸ் டயஸின் இம்முயற்சி மிகவும் பெறுமதியானது.

பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன.

Cover designed by - Palitha janaranjane    Jayan print Graphics

TP 153-01-2015-06-T

WISDOM FOR A BETTER WORLD

THOTHANNA PUBLISHING HOUSE
Uswewa Road, Anamaduwa. Sri Lanka.
Telephone: 032-2263446
E-mail: thothanna@yahoo.com

ISBN - 978 - 955 - 1848 - 83 - 5
978 - 955 - 1848 - 83 - 5

LKR 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org